<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருநெல்வேலி.</u>

<u>வழக்கு எண் : **MCOP.No. 2068/2024**</u>

**<u>நாள் 17.02.2026 PW1 சங்கர்</u>**

**<u>குறுக்கு விசாரணை (R1)</u>**

என்னுடைய வயது, வருமானம், வேலை ஆகியவற்றை காட்டக் கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய மாத வருமானத்தை இந்த மனுவிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி வந்த நபர் மெதுவாகவும், கவனமாகவும் வந்தார் என்றும், நான் தான் என்னுடைய இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி, அந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்பதால், இந்த எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இந்த எதிர்மனுதாரர் வாகனம், 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாலும், இந்த எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமுறைகளை மீறவில்லை என்றும், எனவே எனக்கு ஏதேனும் இழப்பீடு கிடைக்க வேண்டுமென்றால், 2, 3 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. எனவே இந்த எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (R2)</u>**

விபத்திற்கு முன்பு நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் இந்திய ராணுவத்தில் வேலை பார்த்துவிட்டு, ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு ஓய்வூதியம் எவ்வளவு வருகிறது என்றால் ரூ.17,473/- வாங்குகிறேன். விபத்து தேதியில் நான் எவ்வளவு ஓய்வூதியம் பெற்றேன் என்றால் சிறிது குறைவாக பெற்றேன். விபத்து சமயத்தில் நான் தெர்மல் பவர் பிளாண்டில் காவலாளியாக வேலை பார்த்து, எவ்வளவு சம்பளம் பெற்று வந்தேன் என்றால் ரூ.26,000/- பெற்று வந்தேன். ம.சா.ஆ.8 ஆவணம் தெளிவாக இல்லை என்றும், அந்த ஆவணத்தை வழங்கிய நபரை விசாரித்தால் தான், அதன் உண்மைதன்மை குறித்து முடிவு செய்ய முடியும் என்றால் சரியல்ல.

விபத்திற்கு பின்பு நான் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னை பணிநீக்கம் செய்யவில்லை. நான் பணிக்கு செல்லவில்லை. மேற்படி சங்கதி குறித்து அந்த நிறுவனத்தை விசாரித்தால் தான் அதன் உண்மைதன்மை குறித்து தெரிய வரும் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் வேலை பார்த்ததாகவும், சம்பளம் பெற்று வந்ததாகவும், இழப்பீடு பெறுவதற்காக மிகைப்படுத்தி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு உரியது என்றால் எனக்கு உரியது. என்னுடைய காப்பீட்டு கழகத்திற்கு இந்த விபத்து குறித்து நான் கோரிக்கை மனு எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ரூ.96,000/- செலவானது ஆனால், ரூ.83,000/- மட்டும் எனக்கு கொடுத்தார்கள். அது சம்மந்தமாக பிரதான மனுவில் காலம் எண்.17 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

விபத்து சமயத்தில் நான் எதற்காக சென்று கொண்டிருந்தேன் என்றால் திருமண நிகழ்ச்சிக்கு விருதுநகர் மாவட்டம், ஆலங்குளத்திற்கு சென்றுவிட்டு, வெம்பக்கோட்டைக்கு திரும்ப வந்து கொண்டிருந்தேன். விபத்து நடந்த ரோடு வளைவான ரோடு என்றால் சரிதான். குற்ற வழக்கு சம்மந்தப்பட்ட மாதிரி வரைபடம், மகஜர் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் விபத்து ரோட்டின் மையப்பகுதியில் நடந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது எனவும், அது எனக்கு விரோதமாக இருப்பதால், நான் அதை வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து எனக்கு எதிர்திசையில் ஈச்சர் வண்டி வந்து மோதியது என்றால் சரிதான். எதிர் எதிரே மோதிக் கொண்டோம் என்றால் சரியல்ல. சைடில் தான் மோதியது. ரோட்டு வளைவில் எதிரே வந்த வானத்தை நான் கவனிக்காமல், அதிவேகமாக வந்து, எதிரே வந்த வண்டியின் மீது மோதி, நான் தான் விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் வெடி தயாரிக்கும் கம்பெனியில் வேலை பார்க்கும் ஆட்களை ஏற்றிச் செல்லக்கூடியது என்றும், அதனால் அது வேகத்தை காட்டக் கூடிய ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

அதனால் அந்த வாகனம் அதிவேகமாக செல்ல முடியாது என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் முதலுதவி சிகிச்சை சிவகாசி அரசு மருத்துவமனையிலும், பின்னர் விருதுநகர் அரசு மருத்துவமனையிலும், பின்னர் மதுரை, வேலம்மாள் மருத்துவமனையிலும் நான் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். எனக்கு ஏற்பட்ட காயத்தினால் தான் கால் துண்டிக்கப்பட்டது என்பதையும், மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்பதையும், எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்தால் தான் அதன் உண்மை தன்மை குறித்து அறிய முடியும் என்றால் சரியல்ல. வேலம்மாள் மருத்துவமனையில் எனக்கு எவ்வளவு மருத்துவ செலவானது என்றால் சுமார் ரூ.20 லட்சம் செலவானது. மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட செலவில் நான் முன்னாள் இராணுவ வீரன் என்பதால் ரூ.13 லட்சம் எனக்கு இன்சூரன்ஸ் மூலம் கிடைத்தது. மீதப் பணம் ரூ.7 லட்சத்தை நான் கையிலிருந்து கட்டினேன். நான் கட்டிய பணத்தை இன்சூரன்ஸில் ஏன் நான் கேட்கவில்லை என்றால் எனக்கு கிடைக்காது. ம.சா.ஆ.10 ஆவணம் தமிழ்நாடு அரசால் பயன் அடைவதற்காக கொடுக்கப்பட்ட ஆவணம் எனவும், அது எனது ஊனத்தை கணிக்கக் கூடியது இல்லை என்றால் சரியல்ல. எனவே அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனை குழுமம் என்னை விசாரித்து, எனக்கு ஊனச்சான்றிதழ் வழங்கினால் தான் எனக்கு எவ்வளவு ஊனச்சதவீதம் ஏற்பட்டது என்று முடிவு செய்ய முடியும் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் வாகனம் 40 பயணிகளை ஏற்றி செல்லக் கூடிய கனரக வாகனம் என்றும், அதனுடைய மொத்த எடை அளவு 8,850 கிலோ எடை உடையது என்றால் எனக்கு தெரியாது.எனவே விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுனருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாததால், இந்த விபத்தானது புதிய மோட்டார் வாகன திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த பின்பு நடைபெற்றுள்ளதால், மோட்டார் வாகன விதிமீறல் உள்ளதால், இந்த எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

எனக்கு இழப்பீடு கிடைக்க வேண்டுமென்றால் 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 முதல் ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் என்னால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மற்றும் வட்டி விகிதம் அதிகப்பட்சமானது என்றால் சரியல்ல. இந்த எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

M AMIRTHAVELU
Digitally signed by M AMIRTHAVELU
Date: 2026.02.17 18:46:13 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருநெல்வேலி